ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

प्रातर्द्यूतप्रसङ्गेन मध्यान्हे स्त्रीप्रसङ्गतः ।
रात्रौ चोरप्रसङ्गेन कालो गच्छति धीमताम् ॥

இந்த சுலோகமானது நாமெல்லோரும் எவ்விதம் தற்போது காலங் கழித்துவரவேண்டுமென்ற பிரகாரத்தை வேடிக்கையாக அறிவிக்கின்றது. அதாவது, "புத்திசாலிகள் விடியற்காலையில் சூது, சொக்கட்டான், முதலியவற்றை ஆடுதலாலும், போஜனத்திற்குப் பிற்பகலில் ஸ்திரீகளைப் பற்றிய விசாரத்தாலும், இரவில் திருடர்களின் வியாபாரத்தாலும் காலங் கழித்துவருகின்றார்கள்" என்று இந்த சுலோகத்தின் வெளிப்படையான அர்த்தம். சூது, காமம், திருட்டுத்தனம் முதலியவற்றால் காலங்கழிப்பவர்களை புத்திசாலிகளென்று எப்படிப் புகழ்ந்து பேசமுடியும்? இவையெல்லாம் தீயச்செயலன்றோ? ஆகவே இதன் உண்மை அர்த்தம் வேறென்று கூறவேண்டும். அதாவது அறிவிற்சிறந்த பெரியோர்கள் காலையில் சூது, சொக்கட்டான் விளையாட்டுகள் விளையாட்டால், ராஜ்யத்தையிழந்த பாண்டவ சரித்திரமாகிய மஹாபாரத ப்ரஸங்கத்தாலும், பகலில் சீதாசரித்திரமாகிய ஸ்ரீராமாயண கதாகாலக்ஷேபத்தாலும், இறவில் நவநீதசோரனாய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் சரித்திரமாகிய ஸ்ரீமத் பாகவத கதா ப்ரசங்கத்தாலும், காலங்கழிக்கவேண்டுமென்று. நமக்கு விளைகின்ற இன்பதுன்பங்களுக்கும், நமது நன்மதியும், துன்மதியுந்தான் காரணம். நன்மைக்கும், தீமைக்கும், இவைகளே காரணமென்று உணர்ந்துகொண்டால் அனேக ஆபத்துக்களைநாம் விலக்கிக்கொள்ளலாம். நன்மை தீமையையாராய்ந்து, நன்மையில்ப் புத்தியைச் செல்லும்படி செய்வதுதான் அறிவாளிகளுக்கழகு. முன் பழக்கவாசனையால்தான் தீமையில் மனிதனின் புத்தி நாடுகின்றது. அதை ஸதாசாரத்தாலும், குருபதேசவழியாலும் திருப்பி தர்மமார்க்கத்தில் நாடும்படி செய்யவேண்டியது நம் முதல்கடைமையாகும். பாரதம் முதலிய புராணங்களாலும் நமக்கு நற்புத்தியுதித்துவிடுமானதால் ஒவ்வொரு கிராமங்களிலுங்கூட அங்குள்ள அறிவாளிகளின் மூலமாகப் புராண ப்ரவசனம் நடைபெறுவதும் தற்போது அவசியமே. ஆதலால் இந்த சுலோகத்தின்படி நமது பாதகண்டம் பூராவும் சிறிதளவாவது அனுஷ்டித்துவரும்பட்சத்தில் மேனாட்டு வாசனை அடியோடு நம் நாட்டைவிட்டு ஓடிவிடும் என்பது நிச்சயம்.

சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-ஹு ஆடி-மீ ௧௩௨

வைதிகமதாப்யுதயம்.

அனேக நூற்றாண்டுகளாக நமது வைதிகமதத்துக்கு பல இன்னல்கள் சம்பவித்து அதன் ஸ்வரூபத்தை அடியோடு சீரழிந்தபோதிலும் அவையெல்லாவற்றையும் லக்ஷ்யம் செய்யாமல் இதுவரையிலும் என்றும் மாறாத திடகாத்திரத்துடன் விளங்கி வருவதை கவனித்தால் வைதிக மதத்தின் மகிமையும் இயல்பும் சக்தியும் அதையனுஸரிப்பவர் அடையும் பலனும் நன்கு விளங்கும். நான்கு புருஷார்த்தங்களுக்கு இருப்பிடமாயும் மகரிஷிகளின் பரிசுத்தபூமியாகிய நமது ஆர்யாவர்த்தத்தின்நிலைமை நாளுக்குநாள் மாறிக்கொண்டே வருகின்றது. தர்மத்தைப் போல் அதர்மத்தையும் பகவான் எப்போது சிருஷ்டித்தாரோ அதுமுதல் வைதிகமதத்துக்கு ஆபத்துத் தோன்றினவாறாகவே இருக்கின்றது

இதன்றி தற்காலத்தில் முக்கால் நூற்றாண்டுகளாக சில சீர்திருத்த சங்கங்களும் சீர்திருத்தக்காரர்களும் ஸமுத்திரத்திற்றோன்றும் நீர் குமுழி போல் தோன்றிவருகிறார்கள். ஆனால் அவர்களில் ஒவ்வொருவரும் அபஜெயம் அடைந்தார்களேயன்றி ஜெயம் பெறவில்லை. நமக்குள் காணப்படும் குறைவுகளையெல்லாம்லாம் வைதிகமதத்தின் மீதுசுமத்தி அதை நாசம்பண்ணத் தக்க முயற்சிகள் இவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் நமது புராதன ஆசாரங்கள் ஒழிந்துவிடவில்லை. ஆனால் வைதிகமதாபிவிருத்திக்கு இவர்களின் முயற்சிகள் இடையூறுகள்தான். ஆஸ்திகருக்கும் ஆக்ஷேபமிருக்காது. இதனால் நமது வைதிகமதத்தை இழிவுபடுத்திக் கூறுவதற்கு அனேக காரணங்கள் இருந்தபோதிலும் நாமே தான் அவை எல்லாவற்றிற்கும் மூலஸ்தானம் என்பதை நாம் எப்படி ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியும். சிலர் நமது வைதிகமதத்தின் குறைவுகளுக்கு எல்லாம் காணமாக அவற்றை பாதுகாக்க வேண்டிய முக்கிய அதிகாம் பெ

ற்ற அதிபர்களின் தோஷமென்று கருதுகிறார்கள். அது வாஸ்தவ மே ஆனாலும் அப்படிப்பட்ட அதிகாரம் பெற்ற அதிபர்கள் தற்போது காணக் கிடைப்பது அரிதாயிற்று.

ஆதிகாலத்திலோ அனேக க்ஷத்ரிய குமாரர்கள் அவ்வதிகாரத்தை வகித்துவந்தார்கள். அவர்களுக்குப் பிறகு இவ்வயல் நாட்டாரின் அரசாக்ஷியில் அவ்வதிகாரம் பீடாதிபர்களைத் தவிர மற்றவரிடம் தங்கியிருக்க முடியாது. அவர்களிடமும் நாம் குறை கூறுவதற்கு இடமில்லை. அவர்களின் உபதேசப்ரகாரமாக வைதிகமதானுஷ்டானத்தை செய்ய விரும்புகிறவர்கள் அதிக ஸ்வல்பந்தான் மதத்திலும் தெய்வபக்தியிலும் முன்னோர்களிடத்தில் மகத்வபாவனை செலுத்துவதிலும் நம்பிக்கையின்றி கேவலம் நாஸ்திகர்களாக விளங்கும் நம்மவரின் புத்தியின் பிரவர்த்தியை நிவிருத்திக்க யாரால் தான் முடியும். ஈசுவரனாலும் முடியாது. ஆகவே நமக்கும் நமது மதத்திற்கும் ஏற்பட்ட ஹீனஸ்திதிக்கெல்லாம் நாமே தான் மூலகாரணமென்பது திண்ணம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் மதவிஷயத்தில் உண்மை ஊக்கம் நமக்கு ஏற்படாமல் இருப்பது வெகு விந்தையாயிருக்கிறது, நமக்கு வெகு நாளாக அர்த்தத்தில் பேராசை ஏற்பட்டு எவ்விதத்திலும் அவ்வர்த்தத்தை ஸம்பாதிப்பதிலேயே பிரதான நோக்கம் வைத்துக்கொண்டோமேயன்றி எள்ளளவும்மதானுஷ்டானத்தில்இல்லையென்பதை யாராவது மறுக்க முன் வருவார்களா? நாம் மதத்தில் முன்னேற்றமடைய வேண்டுமானால் அர்த்த காமங்களில் நமக்குள்ள ஆசையை கொஞ்சம் கொஞ்சமாய் கூடியவரையில் குறைப்பதற்கு வழி தேடவேண்டியது அவசியம். அன்றியும் நமது ஆரியமாணவர்களுக்கும் மற்றவர்க்கும்நமதுவைதிகமதத்தின் ஸ்வரூபம் இன்னதென்று தெரியவேயில்லை. அதை அறிந்துகொள்ள விருப்பமும் இல்லை. இப்படியிருக்கும் தருணத்தில் அவர்களுக்கு வைதிகமதத்தின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் அடிக்கடி உபந்யாஸ மூலமாகவும் பத்திரிகை வாயிலாகவும் பகிரங்கப்படுத்துவது அவசியமேயாகும். தற்போது மதவிஷயத்தை உண்மையாக உபதேசிக்கும் உபன்யாஸமும் பத்திரிகையும் வெகு துர்லபமென்பது யாவரும் அறிந்த விஷயம். அப்படி மதவிஷயத்தில் சிரத்தையுள்ள பத்திரிகை ஏதாவது ஒன்றிரண்டு இருந்தால் அதனை [illegible] அதிலுள்ள விஷயங்களை கவனியாமலும் உதா

சினமாக இருந்தால் நமக்கு மத அறிவு உதிக்க வேறு என்ன உபாயமிருக்கிறது.

ஆதலால் வைதிகர்களாகிய நாம் நமது மதத்திற்கு எவ்வளவு ஹீனஸ்திதி ஏற்பட்ட போதிலும் அதனை லக்ஷியம் செய்யாமல் பரமாசார்யாளின் பரிபூர்ண கிருபா கடாக்ஷத்தை முன்னிட்டு அதன் அபிவிருத்தியைக் குறித்தே பாடுபட்டு வருவோமானால் அது ஒருபோதும் வீணாகாது. "பொறுத்தார் பூமியாள்வார்'' என்னும் பழமொழி பொய்யோ. இதுவரையில் பொறுமையுடன் கஷ்டங்களை நாம் ஸஹித்து வந்ததால் இறுதியில் சுகமடைவோம் என்பது யாவரும் மறுக்கவொண்ணா உண்மையல்லவா. ஆனால் வைதிக மதாபிவிருத்தியைக் குறித்து ஆரம்ப சூரத்வம் செய்து பிறர் நகைக்கும்படி இருப்பது நமக்கழகல்ல. காரியஸித்தி ஏற்படும்வரையில் நமது ப்ரவிருத்தியை அனுஷ்டித்தே தீரவேண்டும். நமது ஸுகங்களையும் பெயரையும் புகழையும் அதோடு உயிரையும் கூட விட்டுவிட்டு வைதிக மதமென்னும் அணையை ஒருவரும் உடைக்காமல் காப்பாற்றவேண்டும். அதற்காக நமது ஜனஸமூகத்தின் ஆத்மசக்தியெல்லாம் ஒன்று சேர்க்கவேண்டும். மதத்திற்காக உழைக்கவேண்டியது நமது கடமையேயன்றி பலனைக்குறித்தல்ல. பலன் தனக்குத்தானே உண்டாகும். இவ்வாறு நிஷ்காமமாய்ப் பாடுபடும் நமக்கு ஸர்வாந்தர்மியாயும் ஸர்வ சக்தராயும் உள்ள ஸர்வேசன் நற்புத்தியையும் அதற்குறிய ஸதுபாயத்தையும் கட்டாயமாய் அனுக்ரஹிப்பார் என்பது ஆஸ்திகர்களின் துணிபு.

சுபம் **V.** ஜகதீச்வரசாஸ்திரிகள்.

புக்கா என்னும் பஞ்சகங்கா க்ஷேத்திரத்தில் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடாதிபதி சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸன்னிதானத்தில் **19—7—32** இரவு $7\frac{1}{2}$ மணிக்கு ப்ரும்மஸ்ரீ V. S. வேங்கட்டராமசாஸ்திரிகள் செய்த உபன்யாஸச் சுருக்கம்.

மானிடப் பிறவியின் உயர்வும் மனிதர் கடமையும்.

பெறுதற்கரிய உயர் மானிடப் பிறவு மிகவும் போற்றுதற்குரியது. ஏனெனில் மனிதன் இந்திரிய ஸமூஹத்தின் பூர்ணத்தன்மையை பெற்றிருப்பதும் வேண்டுவதை அடைந்து வே

ண்டாதவற்றை விலக்க பகுத்தறிவு வாய்க்கப் பெற்றிருப்பதும் முக்கிய காரணங்களாகும். கேவலம் போகத்தையோ துக்கத்தையோ அனுபவிப்பதற்காக மாத்திரம் மானிட சரீரமானது இருப்பிடமாக இல்லை. சுகம் துக்கம் இரண்டுங் கலந்த வாழ்க்கையை நடத்தவும் வருங்கால நன்மை தீமைகளுக்குக் காரணமான காரியங்களை சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கும் சாதனமாக மனிதப் பிறவி இருந்து வருகிறது. இதன் மூலம் மனிதன் நித்யாநித்ய வஸ்து விவேக முயற்சியில் ஈடுபட்டு அத்வைதாத்ம ஸாக்ஷாத்கார நிலையை அடைய சௌகர்யங்கள் வாய்க்கப் பெற்றருக்கிறுன். இதனுல் தான் மனிதன் ஜீவாராசிகளுள் உயர்ந்தவனுகக் கருதப்படுவான்.

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்பது ஒரு சாரார் அபிப்பிராயம். இது பொதுவாக அனுபவத்திற்கு விரோதமாகவும் சாஸ்திர முறையில் முறண்படுவதாயும் இருக்கிறது. சமத்வம் சகோதரத்வம் என்னும் வார்த்தைகளை பேச்சளவில் சொல்லிக் கொண்டு இவ்வாதமானது சுயநலத்தை நோக்கமாகக் கொண்டிருந்தால் அத்தகையபிரசாரங்கங்கள் ஸந்துஷ்டியை உண்டுபண்ண மாட்டா.

உலகில் மனிதர் பல துறைகளில் வெவ்வேறு விதமாய்ப் பிரவர்த்திப்பதின்மூலம் சிலர்கைத்தொழில்களிலும் சிலர் மூளைக்கு வேலை கொடுக்கும் தொழில்களிலும் மற்றும் பலர் பலதொழில்களிலும் ஈடுபட்டு தலைவன் வேலைக்காரன் என்பதாய் உயர்வு தாழ்வை இயற்கையாகவே அடையப் பெற்றிருக்கிறுர்கள். இவ்வாறே சுகதுக்கங்களிலும் ஒவ்வொருவனும் மாறுபட்டவனுகவே இருந்து வருகிறுன்.

மனித சமூஹத்தை மாத்திரம் நாம் ஆராய்ந்தாலும், எத்தகைய அரசாக்ஷி முறையிலும் சீர்த்திருத்தங்களிலும் உயர்வு தாழ்வு தவிர்க்க முடியாததாயும் யாவரையும் ஒரேவித சந்தோஷத்தை அனுபவிக்கும்படிச் செய்து ஓர் ஸமத்வநிலையை ஸ்தாபிப்பது ஸாத்யமற்றதாகவும் ஆகின்றது. எனவே ஜீவாராசிகளில் உயர்வு தாழ்வையும் மனிதர்களுள் உயர்வு தாழ்வையும் மனிதர்களைக் காட்டிலும் அதிக போகத்தை அனுபவிக்கும் உயர் பிறவிகளையும் அங்கீகரிக்க வேண்டியதாக ஆகிறது, எவ்விதம் குறிப்பிட்ட

ரஸாயனத்தில் பிறவற்றைக் காட்டிலும் பல விசேஷ சக்திகள் காணப்படுகின்றனவோ, சில மூலிகைகளின் ஓர் பாகம் மாத்திரம் வைத்ய முறைகளுக்கு உபயோகிக்கப்பட்டு பாக்கி யாவும் விலக்கப் படுகின்றனவோ! பதார்த்தங்களின் குணம் உருவம் நிறை நிறம் இவைகள் யாவும் ஒரேவிதமாக இல்லாது மாறுபடுகின்றனவோ! அவ்வாறே நாமும் மனிதசமூகம் முதலிய எல்லாவற்றிலும் ஏற்றத் தாழ்வுகளை மறுக்க முடியாதவர்களாயும் அவைகளில் போட்டிமார்க்கங்களைச் செலுத்தி அனர்த்தங்களை தேடிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டியவர்களாயும் இருக்கிறோம்,

ஸ்தாவர வர்க்கங்களில் உணர்வு சக்தியைத் தவிர வேறொன்றும் விசேஷமாக இருந்துவரவில்லை. மனிதனைத் தவிர்த்த மிருகம் முதலிய ஜீவவகைகளுள் சிலவற்றில் இந்திரியங்களின் குறைவும் பலவற்றில் உணர்ச்சிக் குறைகளும் அதிகமாகப் பகுத்தறிவு இன்னும் இருந்து வருகிறது.

இத்தகைய காரணங்களாலும் ஜீவர்களின் முழு முயற்சிகளுக்கு மாறாக பல துக்க சம்பவங்கள் தடுக்க முடியாவண்ணம் ஏற்படுகின்றமையாலும் இடையிடையே சுகங்கள் ஏற்பட்டாலும் அவை தொடர்பாயும் பூர்ணமாயும் இல்லாததாலும் மனித சக்திக்கு மேற்பட்ட மூலப்பாபவாமும் முற்புறவி பிற்பிறவிகளும் இருந்து வருவதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவை யாவும் மறுக்க முற்பட்டால் எல்லாப் பிறவிகளும் ஒரே ஜீவவகையாகவும் மேல் கீழ் பேதமற்று ஒரே அளவு முதலான சரீரங்கள் பெற்றனவாகவும் ஒருவருக்கு சுகம் ஒருவருக்குக் கஷ்டம் என்ற வித்யாஸமில்லாது யாவும் சுகத்தையோ அல்லது துக்கத்தையோ மாத்திரம் அநுபவிக்க வேண்டியதாயும் ஏற்படுவதை அங்கீகரிக்க வேண்டியிருக்கும். ப்ரத்யக்ஷமான உலக நடைக்கு இந்த ஸித்தாந்தம் மாறுபடுவதால் பொருத்தமற்றதாயும் நிராகரிக்கத் தக்கதாயும் ஆகிறது.

எனவே தீச் செயல்களை செய்வதனால் அதன் பயனாகிய கஷ்டங்களை அநுபவிப்பதற்கும் நற்செய்கைகளின் பயனாக சுகங்களை அநுபவிப்பதற்கும் ஒருகாலம்வேண்டும், மனிதன் தன் ஆயுள் [illegible] க்ஷணம் வரை வ்யக்தமாய் வாக்சரீர வியாபாரங்

களிலும் அல்லது சூக்ஷ்மமான மனோ வியாபாரங்களிலும் பிரவர்த்தியுள்ளவனாக இருந்து வருகிறான். கடைசி க்ஷணத்திய கார்யங்களின் பயனாகவாவது மாணத்திற்குப் பின் பிறவி ஏற்பட்டு சுக துக்கங்களை அனுபவிக்கிறான். அப்பிறவியும் முன் வினைகளுக்கு ஏற்றவண்ணம் மிருகம் பக்ஷி புழு கிருமி என்ற தாழ்ந்த ஜீவனாயும் அல்லது கந்தர்வர் தேவர் என்ற உயர் ஜீவனாயும் ஏற்படுகிறது. நடுத்தமான புண்யபாபங்களால் மறுபடி மனிதப் பிறவியே ஏற்படுகிறது.

தாழ்ந்த பிறவிகள் உயர்ந்த மனிதன் போன்ற ஜீவர்களுக்கு அடிமைப்பட்டு தொண்டு புரிந்து கஷ்டங்களை அனுபவிக்கின்றன உயர் பிறப்பினராகிய தேவர் முதலோர் நீடித்தகாலம் சுகங்களை அனுபவிக்கின்றனர். தாழ்ந்த ஜீவன்கள் இந்திரியங்களின்பூர்ணத் தன்மையையும் பகுத்தறிவையும் பெறாததால் உடனுக்குடன் மரித்து மறுபடி பல கஷ்ட ஜீவன்களாகப் பிறந்து மீண்டும் கஷ்டங்களை அனுபவிக்கின்றன. உயர் பிறப்பினராகிய தேவர் வகைகளோவெனில் மனிதஜன்மத்தில் செய்யப்பட்ட நற்கர்மங்களின் பயனாக விசேஷ போகங்களை ஓய்வொழிவின்றி அநுபவிக்கின்றனரேயன்றிவேறுடன் துக்கங்களைகளைந்துநித்யசுகத்தையடைவதில்லை. அவர்கள் போகங்களை அனுபவித்துபிறகு மனிதப்பிறவியை அடைகிறார்கள்.

தாழ்ந்த ஜீவன்களும், உயர் ஜீவர்களும் முறையே கஷ்டம், சுகம், இவைகளில் போகத்திற்காகவே பிறவியெடுப்பதால் தாழ்ந்த கிருமி முதலிய ஜீவராசிகள் அடிக்கடி மரித்து வேறு உருவுடன் உடனே பிறந்து பகுத்தறிவுமற்று வெகுகாலம் போகங்களைத் தொடர்ந்தனுபவித்து நற் கர்மாக்களின் புண்யம் முடிந்தவுடன் மறுபடி மனித ஜன்மம் அடைகின்றனர்.

தாழ்ந்த ஜீவன்களில் சில இந்திரியங்கள் பூர்ணமாக இல்லாதனவாக இருக்கின்றன, பல பகுத்தறிவு அற்றனவாக உள்ளன. இதனால் கஷ்டங்களிலிருந்து மீட்டுக்கொள்ள வழியறிந்து அதன் படி நடக்கச் சக்தியற்றவைகளாகக் கஷ்டங்களில் உழலுகின்றன. தேவர்கள் கண்கொட்டுதலற்று ஸதா ஜாக்ரதவஸ்தையிலிருந்து மனிதனைவிட அதிகமாக சுகபோகங்களை அனுபவிப்பதால் ஜாக்ர

தவஸ்தையைத் தவிர்த்த அவஸ்தைகள் இருப்பதையோ, போகங்கள் முடிந்தபின் ஏற்படப்போவதையோ அறிந்து அதன்படி நடக்க சந்தர்ப்பம் பெற்றிலர்.

மானிடப்பிறவியோவெனில்,நித்யசுகத்தை அடைவதற்கான நிஷ்காம கர்மாவில் ஈடுபடச்செய்யவும். இஷ்டமிருந்தால் தீய கர்மாக்களைச் செய்து கஷ்டங்களில் உழலவும், போகத்தைக் கருதி நற் கர்மாக்களை அனுஷ்டித்துத் தேவர் முதலிய பிறவி பெற்று புண்யம் தீர்ந்தவுடன் மறுபடி மனிதப்பிறவியடையவும், நிகரற்ற சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறது. கர்மபூமியாகிய உலகில் மனிதன் பிறப்பெடுத்து தீயகர்மங்களை விலக்கி நற்செயல்களைப் பயன் இச்சையின்றி அனுஷ்டித்தால் நித்யாநந்தமான அத்வைத நிலையை அடைகிறான். பாபங்களைச் செய்யின் கஷ்டப் பிறவிகளும் புண்யம் செய்யின் சுகப் பிறவிகளும்தான் ஏற்படுகின்றன, தீச்செயல்களாலும் இச்சையுடன் கூடிய நற் கர்மாக்களாலும், நிரந்தரமான சுகநிலை எட்டுவதில்லை. மனிதன் ஜாக்ரத்ஸ்வப்ன ஸுஷுப்திகள் என்ற மூன்று அவஸ்தைகள் பெற்றிருக்கிறான்.

ஜாக்ரதவஸ்தையில் விசேஷ முன்னேற்பாடுகளுடன் பிரயாஸப்பட்டு எவ்வளவு கார்யங்களைச் செய்தாலும் பூர்ணமான திருப்தி ஏற்படுவதில்லை. மேலும் மேலும் கஷ்டங்களும் இடையிடையே சிறிது சுகங்களும் காணப்படுகின்றன. ஸ்வப்பன தசையில் ஏற்படும் ஐச்வர்யங்களையும் கஷ்டங்களையும் மித்யை என பின்பு அறிகிறோம். சுஷுப்தி அவஸ்தையில் ஓர்வித சுகம் இருப்பதாகக் கூறலாமாயினும், அது அக்ஞானத்தோடு கூடியிருப்பதால் தெளிவானதாயும் ஸ்வச்சமாயும் ப்ரகாசமாயுமில்லை.

எனவே ப்ரம்மம் கண்ணாடியையொத்த மாயையில் பிரதிபிம்பித்து உலகம் தோற்றத்தை அடைகிறதென்றறிந்து அக்ஞானத்தையொழித்து अहं ब्रह्मास्मि நான் ப்ரம்மம் என்னும் உண்மையறிந்து நான்காவது அவஸ்தையாகிய அந் நிலையை மனிதன் அனுபவத்தில் அடைவானாகில், அப்பொழுது ஸகல கஷ்டங்களிலிருந்து விடுதலையும், முழு சுதந்திரமும், கால அளவு இல்லாத ப்ரகாசமான பூர்ண சுகமும் ஏற்படுகிறது. இதுவே ஜீவர்களின் முடிவான நோக்கம். மனிதன் இதன்பொருட்டு முயற்சியெடுத்

துக்கொள்ள செளகர்யங்களைப் பெற்றிருத்தலால் இவ் வழியில் முயற்சிப்பதே மானிடர் கடமை.

இதற்குஸமாதானமாகவர்ணாச்ரம பிரிவுகளும் அனுஷ்டான பேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வுண்மையை அறிந்து அவரவர் கர்மாக்களில் வழுவாமல் அனுஷ்டித்து உயர் ,பதவியை அடைதல் வேண்டும். அங்ஙனமின்றி ஒரு வகுப்பை தாக்குவதோ பிறவகுப்பாரின் அனுஷ்டானங்களைக்கொள்வதோ சுகத்திற்கு காரணமாகாது.

அதர்மத்தை விலக்கி தர்மத்தை ஸ்தாபித்து வர்ணாசிரம விதிகளை அனுஷ்டானத்தில் கொண்டு வருவதற்காகவே பகவான் ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கரர் அவதாரம் செய்தார். தொடர்பாக தர்மானுஷ்டானம் பிரகாசிக்கவேண்டி அது முதல் பரம்பரையாக வந்துள்ள உலக போகங்களை நாம் அணுகி ஆத்மபோதத்திற்கான மார்க்கங்களை பக்தி சிரத்தையுடன் அறிந்து அனுஷ்டானத்தில் புகுத்தி மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைவோமாக.

ஸ்ரீ புக்க தேவாலயம்.

வேதமோதி நன்குணர்ந்து தக்க ஒழுக்கமும் தவமும்பெற்று வைராக்ய சம்பன்னராய் விளங்கியவரும் பரமசிவனைப்ப சடைமுடி அணிந்தவரும் ரஹூகண மகரிஷியின் திருக்குமாரருமான ஸ்ரீ கௌதம முனிவர் சித்தூர் மண்டலத்தில் சேர்ந்த நகரி ரயில்வே ஸ்டேஷனுக்கு ஐந்து மைல் தூரத்தில் குசஸ்தலீ நதி தீரத்தில் ஓராச்சிரமம் வகுத்து அதில் புருஷார்த்தங்கள் நான்கினையும் பெற விரும்பித் தவமியற்றி வந்தனர்.

இவ்வாச்ரமம் ஸ்ரீ காசியில் ஆனந்த தாண்டவம் புரியும் ஸ்ரீ விச்வேசுவரரை ஒத்திருக்கும். எவ்வாறெனின் பரமேசுவரன் கொன்றைமாலையையும், மூன்றாம் பிறைச் சந்திரனையும் பாகீரதியையும் சிரசிற்றரித்திருப்பது போல இத்தபோவனமும் தன்கண் நறுமணம் வீசும் பல அழகிய பூங்கொத்துக்களையுடைய கொன்றையாதி பல விருக்ஷங்களையுடையதாயும் ஆகாயத்தை அளாவி உயர்ந்திருப்பதாலும் இது சந்திரமண்டலத்தைத் தன் உச்சியில்

தரித்திருக்கின்றது. ஈண்டுக் கிளிகள், குயில்கள் முதலிய இன்னிசைக் குரல் பறவைகள் சதா காலமும் கேட்போர் மனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கும்.

இத்தகைய பெருமை வாய்ந்த பல முனிக் கூட்டங்களுக்கு உறைவிடமாய் விளங்கும் இவ்வாச்ரமத்தில் கௌதமர் தமது தவ வலிமையால் கங்கையாம் விண்ணாற்றை ஐந்து கட்டங்களில் அந்தர்வாஹினியாய் வந்து பெருகும்படி செய்துள்ளார். மற்றும் ஸ்ரீ காசியில் வீற்றிருக்கும் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் ஸ்ரீ அன்னபூரணி விசாலாக்ஷி அம்மையார் சமேத ஸ்ரீ விசுவேச்வரஸ்வாமியாரையும் காலபைரவனையும் பிரயாகைமாதவஸ்வாமியையும்இவ்வாச்ரமத்தில்நித்தியஸான்னித்யமாய்வீற்றிருந்துபலகோடி ஆன்மாக்களுக்கருள் புரியுமாறு செய்தருளினர். ஆதலின் இந்த க்ஷேத்திரம் அபரகாசியெனப் பெயர் பெற்றதாகும். இது காசிக்குச் சமமான தீர்த்தஸ்தலமென்றதனாலேயே இதன் பெருமையை பெருக்கிக் கூறுதல் மிகையேயாகும்,

பல்லறங்களுக்கு முறைவிடமாயும் ஸ்தலங்களுக்கெல்லாம் சிறந்ததாயும் விளங்கும் இவ்வாச்ரமத்தில் உள்ளன்போடுசென்று ஆகாச கங்கையில் நீராடி காலபைரவனை வணங்கி இறைவனை அர்ச்சிக்கின் மலடியும் மகப்பேறுறுவள். நோயாளியும் சுகமுறுவன். வறிவாளும் பொருளுடையோனுவான். பல சொல்லிபென். யார் யார் எது எது வேண்டுவரோ அவர் அவர் அது பெறுவர் என்பதில் யாதோரையப்பாடுமின்றும். கயா முதலிய பல புண்ணிய க்ஷேத்திரங்களைப் போன்று இங்கேயும்தீர்த்த சிரார்த்தங்கள் அஸ்திநிக்ஷேபணம் முதலிய காரியங்களைப் பலர் இயற்றி நற்கதியடைந்ததாகப் பல புராணங்கள் கூறுகின்றது. முக்கியமாய் ஸ்ரீ மஹாபாகவதம் ஐந்தாம் ஸ்கந்தம் 19-வது அத்யாயம் காகமுக பர்வத வருணனையில் பரக்கக் காணலாம்.

இன்னும் இக்காலத்தில் காசிக்குச் செல்லச் சக்தியற்றவர் இத்தலத்திற்கு வந்து புக்கவென்று கூறப்படுமிக்கங்கையில் ஸ்னானம் செய்து இறந்த முன்னோர்களுடைய எலும்புகளைக் கங்கையில் வைத்து சிராத்தம் முதலியன புரிவது கண்கூடேயாகும். புத்திரப் பேறற்றவர்களும் இத் தூய கங்கையில் நீராடிக்காலபைரவனையும் ஈசுவரனையும் வணங்கி பயனடைகிறார்கள். பலர் கால

பைரவரை வேண்டி நினைத்த பயனெய்திச் சிலையில் பைரவமூர்த்தி களைப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர். இன்றும் செய்துவைத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாச்ரமமானது ஸ்தல விசேஷமும் தீர்த்தமான்மியமும் மூர்த்திச் சிறப்பும் வாய்ந்ததென்பது வெள்ளிடைமலையாம். ஆதலின் இவ்வாச்ரமம் ஞானிகளுக்குறைவிடமாயும் சாதுக்களுக்குரிய க்ஷேத்திரமாயும் பக்தர்களுக்குக் கற்பக விருக்ஷமாயும் உள்ளதென்பது உண்மைக்கு மாறன்று.

இத்தகைய பெருமை வாய்ந்த இத்தலமானது தற்காலத்தில் க்ஷீணதசையை அடைந்துள்ளது. இதை யுணர்ந்து பல அன்பர்கள் இதை ஜீர்ணோத்தாரணம் செய்ய நினைத்து தற்போதைய பிரதானமந்திரி கல்வியிலாகா மந்திரி கனதனவான்கள் சிவநேயச் செல்வர்கள் பக்தசிகாமணிகள் பல துறைகளிற்றேர்ந்த கல்வியாளர் முதலியவர்களை இத்தலத்திற்கு வரவழைத்து பலவாறு வேண்டி ஜீர்ணோத்தாரணம் செய்துவருகின்றனர். யாத்ரீகர்களுடைய சௌகரியங்களை உத்தேசித்து இங்கே பலர் இருக்குமிடங்களைப் பல அன்பர்களின் திரவிய சகாயத்தால் கட்டியிருக்கின்றனர். மற்றும் அனேக சத்திரங்களும் இருப்புகளும் ஆகார சீர்திருத்தங்களும் செய்ய 'புக்க' தேவாலய ஜீர்ணோத்தாரணம் கமிட்டியார் இறைவனருளைக் கொண்டு சதா முயன்று வருகின்றனர். ஆதலின் நம்பாரத நாட்டவர் முக்கியமாய்த் தென்னாட்டவர் இத்தலத்தின்முன்னேற்றத்தைக் கருதித் தங்களாலியன்றளவு பொருளுதவி புரிந்து நிர்வாகஸபையார் நினைத்த காரியத்தைமுட்டின்றி முடியுமாறு செய்யப் பன்முறை பிரார்த்திக்கப்படுகிறார்கள்

மேற் கூறிய மஹிமாதிசயங்கள் பொருந்திய திவ்விய க்ஷேத்திரத்தில் பல கனதனவான்கள் விஜயஞ் செய்து நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்து ஷி க்ஷேத்திரம் தென்காசியே என்றும் காசியில் உள்ள சகல மகிமைகளும் இங்கே இருக்கின்றனவென்றும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார்கள்.

இங்ஙனம்,

G. ரங்கய்ய ரெட்டி, N. சுப்பிரமணிய சர்மா,
பிரஸிடெண்ட். காரியதரிசி.

மனுஸ்மிருதி அத்தியாயம் 2
சில வசனங்கள்.

1. வேதாத்யயனம், யஞ்ஞம், இவைகளைக் குறைவன்னியில் செய்கிறவும், தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை நன்றாய் நடத்துகிறவுமானவர்களின் வீட்டிலிருந்து ஒவ்வொருநாளும் சுத்தனாயிருந்து பிரம்மசாரி யாசித்து ஆகாரம் கொண்டுவர வேண்டும்.

2. பிரம்மசாரி தன் ஆசார்யரின் குலத்திலும், தன் ஞாதி குலத்திலும், தன் தாய் குலத்திலும் பிக்ஷையெடுக்கச் செல்லலாகாது. வேறு பிக்ஷையெடுக்கத்தகுந்த வீடு இல்லாவிடில் தன் தாய்வர்க்க பந்துக்களிடத்தில் பிக்ஷையெடுக்கலாம். அவர்கள் இல்லாவிடில் தன் ஞாதிகளை யாசிக்கலாம். அவர்களுமில்லாவிடில் தன் ஆசாரிய குலத்திலே யாசிக்கலாம்.

3. மேற்சொல்லிய பிக்ஷைக்கு யோக்கியமானவர்களில்லாவிடில் கிராமம் முழுதிலும் யோக்கியதையைக் கவனியாமல் சுத்தனாயிருந்து வாய் பேசாமல் பிக்ஷையெடுக்கலாம். ஆனால் மகா தோஷங்களுள்ளவர்களிடம் ஒருக்காலும் யாசிக்கவே கூடாது.

4. சுத்தமான வெளிப் பிரதேசத்திலிருந்து ஸமித்தைக் கொண்டுவந்து பூமியில் கீழே வைக்காமல் சுத்தமான இடத்தில் வைக்கவேண்டும். காலையிலும் மாலையிலும் கவனத்துடன் அச்சமித்துகளைக்கொணடு அக்னியில் ஹோமம் செயயவேண்டும்.

5. ரோகமற்ற பிரம்மசாரி தொடர்ந்து ஏழுநாள் பிக்ஷை எடுக்காமலும் ஸமிதாதானம் செய்யாமலும் இருந்தால் அவனை விட்டு பிரம்மசர்யம் விலகும். அதற்கு அவன் அவகீர்ணமென்ற பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

6. பிரம்மசாரி ஒருவனுடைய ஆகாரத்தையே சாப்பிடக் கூடாது. பலர்களிடம் பிக்ஷையெடுத்துத்தான் தினந்தோறும் சாப்பிடவேண்டும். ஏனென்றால் பிக்ஷையெடுத்துச் சாப்பிடுவது பிரம்மசாரிக்கு உபவாச நியமத்திற்கு ஒப்பாகுமென்று ரிஷிகளின் அபிப்பிராயம்.

7. தேவதையை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மாவில் அபேக்ஷிக்கப்பட்டால் பிரம்மசாரி தன்னிஷ்டப்படி தன் விருத்திற்கேற்றபடி ஒருவருடைய ஆகாரமாயிருந்தாலும் அதை உண்ணலாம். அம்மாதிரியே பித்ருக்களுக்காகச் செய்யப்படும் சிராத்தத்திலும் வேண்டப்பட்டால் ரிஷிபோல் தோஷமற்ற உணவை புஜிக்கலாம். இப் போஜனத்தால் பிரம்மசாரி நியமம் கெடுவதில்லை.

8. மேற்சொல்லிய ஒருவர் உணவு பிராம்மண பிரமசாரிக்குத்தான் உரியதென்றும், க்ஷத்திரிய வைச்யர்களுக்கு ஏற்றதில்லை என்றும் பண்டிதர்கள் கூறுகிறார்கள்.

9. தினந்தோறும் ஆசார்யரால் ஏவப்பட்டாலும் ஏவப்படாதபோனாலும் அத்யயனம் செய்வதிலும் ஆசார்யருக்குதவி புரிவதிலும் சிஷ்யன் முயலவேண்டும்.

10. சரீரம், வசனம், புத்தி, இந்திரியங்கள், மனது இவைகளை அடைக்கி, கைகளைக் கட்டிக்கொண்டு குருவின் முகத்தைப் பார்த்து சிஷ்யன் நிற்கவேண்டும். உட்காரக்கூடாது.

R ஸ்வாமிநாத அய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

ச்வேதன்.

1. ஒரு ஸமயம் அக்னி பிராமணவேஷம் பூண்டார். கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் சரணமடைந்தார். அவர்கள் உனக்கு என்ன வேண்டும் என்றனர். அக்னி தன் ரூபத்தைக் காட்டினார். தனக்கு மருந்தாக காண்டவ வனத்தைக் கொடுக்கவேண்டும் என்றார். உனக்கென்ன நோய் என்றனர். அக்னி சொல்லிற்று.

2. ச்வேதன் என்றோரரசன் இருக்கிறான். அவனுக்கு எப்போதும் யாகம் செய்வதில் ஆசை. எதேஷ்டமாக தக்ஷிணை கொடுப்பான். அனேக பிராமணர்களை அழைப்பான். ஓயாமல் யாகம் செய்வான். யாகப் புகையால் பிராமணர்களுக்குக் கண் அவிழ்ந்தது. ஆதலால் அவர்கள் இவன் யாகத்திற்கு வரமாட்டேன் என்றனர்.

3. உங்கள் பந்துக்களையாவது அனுப்புங்கள் என்றான். அப்படியே அனுப்பினர். அவர்களைக்கொண்டு யாகம் செய்தான். அவர்கள் கண்ணும் அவிழ்ந்தன. அவ்வரசன் நூறுவருஷம் செய்யத்தக்க யாகத்தை ஆரம்பித்தான், அவர்கள் எங்களால் முடியாதென்று போய்விட்டனர்.

4. அவர்களை வணங்கி யான் பாபியா? லோபியா? உங்களுக்குப் பூஜை செய்யாத் தவா? என்னை ஏன் கைவிட்டீர்கள்? உங்களால் முடியாவிட்டால் வேறு எவரையேனும் கூறுங்கள் என்றான், அவர்கள் யோசித்துப் பார்த்தனர். பரமசிவனிடம் செல் அவர் யாகம் செய்துவைப்பார் என்றார்கள்.

5. அவரை நாடி கடுமையாகத் தவம் செய்தான். சிவன் ப்ரத்யக்ஷமானார். என்ன வரம் வேண்டுமென்றார். அரசன் எனக்கு தாங்கள் யாகம் செய்து வைக்கவேண்டும் என்றான். அவர் அப்படியானால் பன்னிரண்டு வருஷம் பிரும்மசர்ய நியமத்துடன் இரு ஓயாமல் அக்னியில் நெய்யால் ஹோமம்செய் என்றார்.

6. அரசன் அப்படியே செய்தான். பரமசிவன் அவனிடம் பரமசந்தோஷங்கொண்டார். எதிரில் வந்து அரசே! யான் பூமியில் வந்து யாகம் செய்துவைப்பது முடியாத வேலை, என்னுடைய அவதாரம் துர்வாஸர். அவரை அழைத்துச் சென்று யாகம் செய் என்றார்,

7. அங்ஙனமே அரசர் துர்வாஸரைக் கொண்டு யாகம்செய்தார். ஆதலால் எனக்கு அஜீர்ண நோய் உண்டானது, பிரும்மாவைச் சரணமடைந்தேன், அவர் காண்டவ வனத்தை பக்ஷிக்கச் சொன்னார். அதைப் புஜிக்க ஆரம்பித்தேன். யானைகள் துதிக்கையால் ஜலம் கொண்டுவந்து என்னை அவித்தன.

8. ஏழுமுறை முயற்சித்தேன். முடியவில்லை. இந்த்ரனுடைய ஸ்நேஹிதன் தக்ஷகன். அவன் காண்டவ வனத்தில் வஸிக்கிறான். அதனால் இந்த்ரன் அந்த வனத்தைக் காக்கிறான். அவனை ஜயித்து அந்தக் காட்டை எனக்குக் கொடுங்களென்று அக்னி கேட்டது.

9. இருவரும் ஆகட்டுமென வாக்களித்தனர். அக்னி ஓர் தேரையும் காண்டீவமெனும் வில்லையும் அர்ஜுன ராஜனுக்குக்

கொடுத்தான். அதைக்கொண்டு சத்ருக்களை வென்றான். அர்ஜுனன் சொன்னசொல்லைக் காத்தான். அக்னியின் வியாதியும் அகன்றது. யக்ஞம் பாவநமான கர்மா.

வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

மந்த்ர மஹிமை. 15உ பாடலீபுரமென்னும் பாட்னா நகரில் ஓடிக்கொண்டிருக்கும் ரெயில் வண்டி திடீரென்று நின்றது. வழியில் யாதொரு கெடுதலுமில்லை. மிஷினிலும் ஒன்றும் கெடவில்லை. வண்டி நிற்கக் காரணமென்ன என்று எல்லோரும் ப்ரமித்தனர். விசாரிக்கும்பொழுது அருகிலுள்ள ஓர் அரசமரத்தில் ஓர் மந்திரவாதியின் பிசாசு இருப்பதாகவும் பலமுறை இதேபோல அது அமாநுஷமான கார்யத்தைச் செய்வதாகவும் தெரிந்தது. வண்டி முன்போல் தானே ஓடிற்று. இறந்தபிறகு கூட அப் பேய்க்கு மந்த்ர மஹிமை உண்டெனில் மந்த்ரங்களுக்கெல்லாம்தாயான காயத்ரியையேனும் உரியவர் ஜபிக்கவேண்டிய அவச்யத்தை நாம் கூறவேண்டுமா?

ஸ்ரீவியாஸபூஜை. 17உ ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத் குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாள் சித்தூர்ஜில்லாவைச்சார்ந்த புக்கை என்னும் கௌதமாச்ரமத்தில வியாஸபூஜா மஹோத்ஸவத்தை நடத்தினார்கள். வழக்கப்படி மஹாராஜாக்களும் ஜமீன்தாரர்களும் தங்கள் காணிக்கையை ஸமர்ப்பித்தனர். ஆலயங்களிலிருந்து ப்ரஸாதம் வந்தன. பண்டிதர்களும் பக்தர்களும் வந்து குவிந்தனர். ஸ்ரீபாகவதம் ஐந்தாவது ஸ்கந்தம் பத்தொன்பதாம் அத்யாயத்தில் சிறப்பாகக்கூறப்பட்ட இவ் வுத்தமக்ஷேத்திரத்தில் ஆதி சங்கராவதாரமான நமது குருஸ்வாமிகளவாள் நடத்தும் இவ் வைபவம் எவரைத்தான் இழுக்காது? பல்லாயிரம் பிராமணர்களுக்கு நடந்த ஸமாராதனையும், ஸ்ரீகுருவரால் அவவர்களுக்கும் காக்ஷியளித்த வைபவமும் மிகச் சிறந்தது. ஆங்கு ஓர் கும்பாபிஷேகமும், ஆசார்ய மட நிர்மாணமும் நடக்கும். இச்

சமயத்தில் ஆஸ்திகர் கற்பூர காணிக்கையைச் செலுத்தி ப்கவத் பாத தர்சனமும் செய்யவேண்டியதவச்யம்.

நன்கொடை. 17௨ காஞ்சியில் ஓர் தனிகர் ராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபிக்க 25-ஆயிரம் ரூபாய் ஸொந்தமாக அளித்தார். இரண்டாயிரம் ரூபாய் புத்தகமும் அளிக்கப்பட்டது. பலர் உபன்யஸித்து ஷ்டிமடத்தை அங்கு ஆரம்பித்தனர். இந்த நன் கொடையை நாம் சலாகிக்காமலிருக்க முடியாது. ஆனால் தலைவர் பேசியதில் உத்தம அதிகாரிக்குச் சொன்ன சம திருஷ்டியை சாமான்யமானவர்களுக்குக் கூறி வர்ணாச்ரம தர்மத்தை அநாத ரவு செய்வதுபோலிருந்தது. அதில்லாமலிருந்தால் நலம்.

ஸ்ரீ அழகியசிங்கர் வாழ்க! 17௨ ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ அஹோ பிலமடம் ஆசார்யஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப்பம் செய்த னர். அன்றிரவு ஸ்ரீஸ்வாமிகளின் நியமனத்தால் வர்ணாச்ரம தர்ம பரிபாலன ஸபை கூட்டப்பட்டது. பற்பல பண்டிதர்கள் மத விஷயமான பல உபன்யாஸங்களைச் செய்தனர். விசேஷமாகக் கர்ப்பாதானாதி ஸம்ஸ்காரங்களின் அவச்யத்தை வற்புறுத்தியது அத்யாவச்யமான காரியம். அநுபவத்தில் வாரத பல வேதாந்த உபன்யாஸங்கள் செய்வதைவிட நாமனுஷ்டித்துவரும் கர்மாக் களின் ஆவச்ய கதையும் மந்த்ரார்த்தங்களையும் புகட்டுவது நற் பயனையளிக்கவல்லது. ஒருநாள் விவாஹத்தைக் கண்டித்துப் பேசியதும் போற்றத்தக்கதே. இவ்வளவு உபன்யாஸங்களையும் ஆமோதித்து முடிவில் தாங்களும் திருவாய்மலர்ந்தருளிய பெரிய சிறிய ஸ்ரீ அழகியசிங்கர்களைப் போற்றுகிறோம்.

லக்ஷராமநாமஜபம்! ப்ரதிதினம் சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் புராணங்கேட்க வருபவர்கள் ஸ்ரீமடத்திலும் வீட்டிலும் ஜபம் முடிந்தவுடன் ப்ரதி தினம் லக்ஷஜபத்திற்குக் குறையாமல் குரு தக்ஷிணையாக அதை அர்ப்பணம் செய்கின்றனர். இதனால் வீண் வம்புகள் அகல்வதுடன் ஸத்வாஸனை உண்டாகிறது. ஆசார்ய கருணையால் அங்ஙனமே என்றும் நடக்குமென நம்புகிறோம்.

வே. ஸோமதேவ சர்மா.